IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.
OS.No. 45 /2018
Deposition of witness for DW1

Name : நீலமேகம்

Father's Name : மார்கபந்து

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the 9 day of November, 2021.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ 9 ஆவணத்தில் சர்வே எண்கள் 222/4, 223 மற்றும் 222/1பி ஆகிய சர்வே எண்கள் இடம் பெறவில்லை என்றால் சரியல்ல. சாட்சியிடம் பி.வா.சா.ஆ9-ஐ காண்பித்து கேள்வி கேட்க அந்த ஆவணம் சரியாக உள்ளது என்று கூறுகிறார். சர்வே எண். 222/1பி என்பது என்னுடைய பக்கத்து வீட்டுக்காரர் சொத்து என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. பி.வா.ஆ7 செட்டில்மெண்ட் ஆவணத்தில் சர்வே எண்.222/1பி- க்கு கட்டுப்பட்ட 14 செண்ட் இடம் எனக்கு எழுதி வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1996-1997-ம் ஆண்டுகளில் தமிழ்நாடு அரசு ஜீவன்தாரா என்ற திட்டத்தை ஆரம்பித்தார்கள் என்றால் சரிதான். அந்த திட்டத்தின் படி 2 1/2 ஏக்கர் நிலம் முதல் 5 ஏக்கர் வரை உள்ள விவசாயிகளுக்கு கிணறு இல்லாதவர்களுக்கு கிணறு வெட்டித்தர ஏற்பாடு செய்தார்கள் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ7 செட்டில்மெண்ட் ஆவணத்தில் சர்வே எண். 222/5-ல் 6 செண்ட் நிலமாக காட்டியுள்ளேன் என்றால் இல்லை அது கிணறு ஆகும். பி.வா.சா.ஆ 7 செட்டில்மெண்ட் ஆவணத்தில் எனது தாய், தந்தை எனக்கு எழுதி வைத்த நிலம் 2.73 செண்ட் என்றால் சரியல்ல 2.72 என்று சாட்சி கூறுகிறார். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ 1 முதல் 6 ஆவணங்களில் சொத்துகளின் முழுவிஸ்தீரணம் 1 ஏக்கர் 65 1/2 செண்ட் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தவறு. வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஜீவன்தாரா திட்டத்தின் கீழ் நான் பயனடைந்தேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ7 செட்டில்மெண்ட் ஆவணத்தில் நான் கிணறு என்பதற்கு

பதிலாக சர்வே எண். 222/5 என்ற சர்வே எண்ணை நிலமாக காட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. ஜீவன்தாரா திட்டத்தின்படி பயனடைய வேண்டும் என்பதற்காக நான் எனது தாய், தந்தையரை ஏமாற்றி அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதி பெற்றேன் என்றால் சரியல்ல. நான் 1964-ல் பிறந்தேன் என்றால் சரிதான். கிருஷ்ணன், சதாசிவம் ஆகியோர் எனக்கு மூத்தவர்கள் என்றால் சரிதான். எனது தாய், தந்தையருக்கு விவசாயத்தை தவிர வேறு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல. எனது தாய், தந்தையர் என்ன வேலை செய்து கொண்டிருந்தார்கள் என்று ஒவ்வொன்றிற்க்கும் நான் கணக்கு வைத்து சொல்லமுடியாது என்று கூறுகிறார். பி.வா.சா.ஆ1 முதல் 6 வரையிலான ஆவணங்கள் 1968 முதல் 1986 வரையிலான ஆவணங்கள் என்றால் சரிதான். சாட்சி தற்பொழுது 1996 வரையிலான ஆவணங்கள் என்று கூறுகிறார். எனது தகப்பனார் 1968 வரை விவசாயம் செய்து தான் ஜீவனம் செய்துவந்தார்கள் என்றால் தவறு. எனது பெற்றோர் அவர்களுக்கு பூர்வீகமாக இருந்த சொத்துக்களிலிருந்து வந்த வருமானத்தை வைத்து தான் இந்த சொத்துக்களை வாங்கினார்கள் என்றால் சரியல்ல. எனது சகோதரர் சதாசிவம் ஆந்திராவில் மின்வாரியத்தில் பணிபுரிந்தார் என்றால் சரிதான். அவருடைய வருமானத்தை வைத்து ஏககுடும்பத்திற்கும் சேர்த்து எனது தாய், தந்தையர் பெயரில் வாங்கப்பட்ட சொத்துக்கள் என்றால் சரியல்ல. 1.1.1994 அன்று ஊர் பெரியர்கள் முன்னிலையில் கூர்சீட்டு மூலம் பாகப்பிரிவினை செய்துகொண்டோம் என்றால் சரியல்ல. கூர்சீட்டு எழுதிய விவரம் எனக்கு நன்கு தெரியும் என்றும் வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. அந்த கூர்சிட்டில் பி அட்டவணை சொத்து வாதி சதாசிவத்திற்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. டி அட்டவணை சொத்து எனக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. கூர்சீட்டின் அடிப்படையில் எனக்கு ஒதுக்கப்பட்ட சர்வே எண். 120/1 எண்ணில் உள்ள வீட்டை நான் எனது தகப்பனாருடன் சேர்ந்து பெரியசாமி என்பருக்கு கிரையம் செய்துகொடுத்துவிட்டேன் என்றால் சரியல்ல எனது தகப்பனார் தான் விற்றார். சர்வே எண். 120/1-ல் கட்டுப்பட்டுள்ள வீட்டை நானும், எனது தகப்பனாரும் ஆவண எண்.36/1998 படி கிரையம் செய்து கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. 1994 முதல்

கூர்சீட்டின் அடிப்டையில் அவரவருக்கு ஒதுக்கப்பட்ட பகுதிகளை அவரவர் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றும், நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. கூர்சீட்டின் அடிப்படையில் தாவா சொத்திற்கு வாதி தான் உரிமையாளர் என்றால் சரியல்ல. எனது தாய், தந்தை 1996-ல் எழுதிவைத்த செட்டில்மெண்ட் ஆவணம் வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. எனது எதிர்வாதம் நிராகரிக்கப்படவேண்டும் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ9 ஆவணம் 2020ம் ஆண்டு பெறப்பட்டது என்றும், வழக்கிற்கு பிந்தி பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவாபடி தீர்ப்பாகவேண்டும் என்றால் சரியல்ல.

(Sd/-)..R.Rajamaheswar
DISTRICT MUNSIF
KATPADI.